


# 2.3 ஆச்சரியமானக் கிருபை

**வேத வசனம்:** **கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.**

*எபேசியர் 2:8*

**அறிக்கை:** **தேவனுடைய கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு எனக்கு உண்டு**



**சத்தியம்:** நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டுள்ளோம். இது நம்முடைய கிரியைகளால் அல்ல. தேவனுடைய அளவற்ற கிருபையினால் மட்டுமே. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது தேவனுடைய ஈவு.

## வேத பகுதி: அப்போஸ்தலர் 22:3-15

**பாடம்**

**1. ஆச்சரியமானக் கிருபை:** ஒரு சிறந்தப் பொருளை அதைப்பெற்றுக்கொள்ள தகுதியற்ற ஒருவருக்கு தருவதே கிருபை ஆகும். மனிதர் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற உண்மையில் தகுதியற்றவர்கள். ஆனால் தேவகுமாரன் இயேசு கிறிஸ்து சிலுவையில் தன் ஜீவனை பலியிட்டு, நமக்கு இலவசமாக அந்தக் கிருபையைத் தந்திருக்கிறார். (ரோமர் 8:32)

**2. கிருபையின் வல்லமை:** தேவனுடைய கிருபையால் பவுலின் வாழ்க்கை அற்புதமாக மாறியது. அவர் அன்பான மனிதனாக மாறினார். மேலும் மிகுந்த கர்வத்துடன் அலைந்த மனிதன் மிகுந்த தாழ்மையுள்ள மனிதனாக மாறியதைக் கண்ட மக்கள் “இவர் மாறியது எப்படி?” என்று கேட்கத்துவங்கினார்கள்.

**3. கிருபையின் உண்மை:** அப்போஸ்தலர் பவுல் உறுதியாக தேவனுடைய கிருபையைச் சார்ந்திருந்தார். ஆகவேதான் அவரால் தேவனுடைய வாத்தைக்குக் கீழ்ப்படிந்து, அருகிலும் தொலைவிலும் வாழ்ந்த மனிதருக்கு தேவனுடைய வார்த்தைகளைச் சொல்லிவர முடிந்தது. கேட்ட மக்களும் தேவனிடத்திற்கு திரும்ப வந்தார்கள். தேவனுடைய கிருபை என்பது மிகவும் உண்மையானது, அதனை நாமும் அனுபவிக்க முடியும்.

**4. விசுவாசத்தினால் கிருபையைப் பெறுதல்:** நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுவை அறிந்தபோதே தேவனுடைய அளவில்லா கிருபையை பெற்றுவிட்டோம். தேவன் சொன்னார், “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.” அதனை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால் நாம் அவரை விசுவாசிக்கவேண்டும். (எபேசியர் 2:7-9, எப்ரெயர் 11:6)

**5. கிருபையைப் பெறுவதன் விளைவு:** தேவனாகிய கர்த்தர் நம் வாழ்வின் மூலமாக இந்த கிருபையை உலகத்திற்கு காண்பிக்க விரும்புகிறார். இந்த கிருபை தம்முடைய பிள்ளைகள் வாழ்வில் ஒவ்வொரு நாளும் அதிகமாக நிரம்பியிருக்கிறது. தேவன் சொன்னார் “என் கிருபை உனக்குப்போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்” (2 கொரிந்தியர் 12:9-10)

**முடிவுரை:** தேவனுடைய கிருபை நம்முடைய பாவங்களை கழுவி விடும். இன்னும் அதிகமாக கிருபையை அனுபவிக்க நாம் எப்போதும் தேவனிடம் ஜெபிக்கவும், திருச்சபைக்கு செல்லவும், தேவனுடைய சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கவும் வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.